(2) அறிவிப்புகள்

(அ) அவையுரிமை மீறல் தீர்மானம்பற்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் இதுபற்றி சென்னை சென்ட்ரல் ஜெயில் கண்காணிப்பாளரிடம் விளக்கம் கேட்கப் பட்டிருக்கிறது. பதில் வந்தபிறகு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரையில் வைகை வெள்ளத்தால் ஏற்பட்ட விளைவுகளும், பெரு மழையால் தஞ்சை கடற்கரை பகுதிப் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Assembly Rules, of a motion to adjourn the business of the House to discuss the following matter of urgent public importance, viz., death of 20 persons in Madurai, disappearance of a helicopter in Madurai Vaigai floods, destruction of double crops in the coastal areas of Thanjavur district due to heavy rains.

Thiruvalargal A. Subramaniam, K. Kandasami, J. James, M. Surendran, Dr. H. V. Hande and Thirumathi T. N. Anandanayaki have given notices of similar motions . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே—ஆல் 82-இன்கீழ் அறிக்கை வைப்பதற்கு நான் தங்களிடத்திலே அனுமதியைப் பெற்று இருக்கிறேன் :—

ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தள்ளிவிட்டு அறிக்கை வைக்கப் படுவது நல்லதல்ல என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்ற உறுப்பினர்களின் பெயர்களைத் தாங்கள் அவைக்கு அறிவித்திருக்கிறீர்கள். சபைக்குத் தேவைப்படுகிற நேரத்தைக் கருதி இந்த அறிக்கையை நான் வைத்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்லலாம் என்று இருந்தேன். அதையே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே தங்கமணி அவர்களை மட்டும் அழைத்துப் பேசச் சொல்லலாம் என்று கருதியிருந்தேன். இது பொதுவான விஷயமாக இருப்பதால் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, வைகை அணைக்கு மேலே பெருமழைக் காரணமாக 16-ஆம் தேதி இரவு 9 மணிக்கு வைகையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுமென்றும் அதன் காரணமாக வைகையில் வெள்ளம் வருமென்றும் வைகைக் கரை ஓரங்களில் இருப்பவர்கள் உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்றும் 16-ஆம் தேதி மாலை 6 மணிக்கெல்லாம் எச்சரிக்கை செய்யப்பட்டது. மீண்டும் ஒருமுறை இரவு 9 மணிக்கு மேல் எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால் அங்கே குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்கள், அந்தக் குடிசைகளைப் பிரிக்க வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே இந்த எச்சரிக்கை செய்யப்படுவதாகப் பலர் கருதிக்கொண்டு அதைப் பிரிக்க மறுத்துவிட்டு அங்கேயே குடியிருந்தது வருந்தத் தக்க ஒன்றாகும். முற்பகல் 10-30

வைகையிலிருந்து திறந்து விடப்பட்டதின் காரணமாகவும், கைகைக்கும் பேரணைக்கும் நடுவில் மழைக் காரணமாகவும் வைகையில் சுமார் 44,000 கியூசெக்ஸ் தண்ணீர் வந்து 16-ஆம் தேதி இரவு 3 மணிக்கு மேல் பெரு வெள்ளம் வந்தது.

இந்த வெள்ளத்தின் காரணமாக வைகை நதிக்குள் குடிசை போட்டுக் கொண்டிருந்தவர்களுடைய குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. வைகையில் இரு கரைகளும் நிரம்பி தாழ்ந்த பல பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால் பல குடிசைகள் சேதமடைந்தன.

மதுரை நகரைச் சுற்றி தாழ்ந்த பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் விடுகள் இழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. விடு இழந்தவர்கள் எண்ணிக்கையை அதிகாரிகள் கணக்கெடுத்துக் கொண்டுள்ளார்கள்.

சோழவந்தான் அருகில் சுமார் 200 விடுகள் சேதமடைந்ததாகத் தெரிகிறது.

மதுரை-சோழவந்தான் சாலை சேதமடைந்துள்ளது.

வெள்ளத்தில் இதுவரை 7 பேர் இறந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. மேலும் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

17-ஆம் தேதி அதிகாலை 7 மணிக்கே மதுரை கலெக்டர் போலீஸ் தீயணைப்பு படைகளோடு, மதுரை கமிஷனரோடு எல்லா பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டு--விடு இழந்தவர்கள் அனைவரும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் தங்குவதற்கும், அவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை போலீஸ் தீயணைக்கும் படையினர் மிகுந்த சிரமத்தோடு காப்பற்றினர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செல்லூர், மாடக்குளம் போன்ற கண்மாய்கள் கரைகள் உடைந்தால் மேலும் சில இடங்கள் பாதிக்கக் கூடுமென்பதால் அந்த கண்மாய்களின் கரைகள் உடனடியாகப் பலப்படுத்தப் பட்டன.

திருச்சியிலிருந்து ஒரு ஹெலிகாப்டர் அரசின் அனுமதியுடன் வரவழைக்கப்பட்டு, நேற்று பிற்பகல் 2-45 மணிக்கு ஹெலிகாப்டர் மூலம் ஆறு பேர்கள் காப்பாற்றப்பட்டனர். ஆனால் திடீரென்று ஹெலிகாப்டர் தாழ்வாகப் பறந்து—மூன்று தாம் ஹெலிகாப்டரி லிருந்து தொங்கவிடப்பட்ட கயிறு ஒன்றை விட்டுவிட்ட ஒருவரைக் காப்பாற்ற முயன்றபோது ஹெலிகாப்டர் தண்ணீரில் சிக்கி மூழ்கியது. அதிலிருந்து விமானி நீந்தி வைகையின் நடுவில் இருந்த ஒரு குடிசையின் மேல் ஏறி உட்கார்ந்து தப்பினர்.

ஆனால் அவருடன் சென்ற இயனைக்கும் படையைச் சேர்ந்த குழந்தைவேலு மூழ்கி இறந்து போனர். அவர் உடல் இன்று காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்த பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள் வதோடு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அந்தக் குடும்பத் தினருக்கு ரூபாய் 5,000 அளிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று மாலை விமானியும் அந்தப் பகுதியிலிருந்த 3 பேர்களும் மீட்கப்பட்டுள்ளார்கள். இதுவரை சுமார் 50 பேர்களுக்கு மேலாக மீட்கப்பட்டுள்ளார்கள். இன்னும் சுமார் 12 பேர்களை மீட்க ஏற்பாடாகியுள்ளது. இன்று காலை கொச்சியிலிருந்து ஒரு கப்பற் படை ஹெலிகாப்டர் மதுரை புறப்பட்டுள்ளது. இன்று மாலைக்குள் அவர்களும் மீட்கப்படுவார்கள்.

விடு இழந்தவர்களுக்கு தற்போதுள்ள அரசு விதிகளின்படி உதவித் தொகை உடனடியாக அளிக்கப்படுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர் களுடைய விளக்கத்திற்குப்பிறகு . . .

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சாவூரைப் பற்றி விளக்கம் தரவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூரைப்பற்றி விவரம் வந்திருந்தால் சொல்லியிருப்பார்கள். அப்படி அவை முடிவதற்கு முன் வந்தால் முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்கள். இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியமில்லை என்று கருதி அதற்கான அனுமதி மறுக்கப்படு கிறது.